**கவனிக்க.-** *2023.02.24 ஆந் திகதிய 2321 ஆம் இலக்க, வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2322 - 2023 මාර්තු මස 03 වැනි සිකුරාදා - 2023.03.03

*2322 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 74 |


**கவனிக்க.-** (i) *பிரிவிடல் (திருத்தம்) சட்டமூலம் 2023, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் 2023, பெப்புருவரி மாதம் 17ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2023, மாச்சு மாதம் 24ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, மாச்சு மாதம் 10ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

73- B 082433 - 353 (2023/03)

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/62635.
மாகாணக் காணி ஆணையாளரின்இல. : NCP/ PLC/ L6/ Higu/04(01).

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பொலன்னறுவை மாவட்டம்,ஹிங்குராக்கொடை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 59, முவன்பெலஸ்ஸ கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த முவன்பெலஸ்ஸ கிராமத்தின் வரைபட இலக்கம் 120141 இன் வலய இலக்கம் 3 இன் துண்டு இலக்கம் 57 இன் மூலம் காட்டப்பட்டுள்ள 0.7102 அளவுடைய காணித்துண்டினை வர்த்தக நடவடிக்கைகளின் பொருட்டு ரம்பொட போல்ஸ் தனியார் கம்பனியானது குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் காணியின் எல்லைகள் பின்வருமாறு:-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 49, 50, மற்றும் 56;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 50, 56, 01 மற்றும் 58;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 01, 58 மற்றும் 23;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 23 மற்றும் 49.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன் பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது வருடங்கள் (30) (2022.10.05ஆந் திகதியிலிருந்து 2052.10.04 ஆந் திகதி வரை ) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- குத்தகை அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணயின் மதிப்பீட்டுப் பெறுமதியின் ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) குறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் மாறுபடாத பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வர்த்தக நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.;

(எ) குத்தகை செல்லுபடியாகும் தினத்திலிருந்து ஐந்து வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாகச் செலுத்துதல் வேண்டும். குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகைப் பணமானது தொடர்ச்சியாகச் செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் செலுத்த வேண்டியிருக்கும் நிலுவைக் குத்தகையின் பொருட்டு 10% தண்டப் பணமும் அறவிடப்படும்.;

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப்பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக் கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு அறிவித்தல் கிடைக்கப்பெறதாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு விடப்படும்.

ரீ.யு.கே.சட்டன்நாயக,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர".
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, பெப்புருவரி 14.

03- 55

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/62217.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : UPLC/ L/17/MD/ L/23.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மொனராகலை மாவட்டம், மடுல்ல பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 104 ஏ, இங்கிணியாகல கிராம அலுவலர் பிரிவின் இங்கிணியாகல கிராமத்தின் அதிகாரம் பெற்ற நில அளவையாளர் அஹமட் எம் மஹ்ரூப் என்பவரின் மூலம் தயாரிக்கப்பட்டிருக்கும் நில வரைபட இலக்கம் 5234 இன் காணித்துண்டு இலக்கம் 02 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 20 பேர்ச் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு ( ஊடுகடத்தும் தூண் ஒன்றினை நிர்மாணிப்பதன் பொருட்டு) அனுசரணை அடிப்படையில் பார்ட் எயாடெல் லங்கா தனியார் கம்பனி குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது .

02. கோரியிருக்கும் காணியின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 01 (அரச காணி);
கிழக்கு : உள்நுழையும் பாதை;
தெற்கு : வாய்க்கால் ஒதுக்கம்;
மேற்கு : அரச காணி.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன் பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**-முப்பது வருடங்கள் (30) (கௌரவ அமைச்சர் குத்தகையை அனுமதித்த 2022.10.07 ஆந் திகதியிலிருந்து) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்.**- 2022 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதி 2% ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்.;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.10.07 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக்குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்கு கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப்பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

டீ.டீ.நவோத்யா சீ. கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, பெப்புருவரி 17.

03- 56

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/70196.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : UPLC/ L/26/KG/ L/179.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மொனராகலை மாவட்டம், கதிர்காமம் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 146 ஏ,செல்லக்கதிர்காமம் கிராம அலுவலர் பிரிவின் கதிர்காம கிராமத்தின் எப்.வீ.பீ. இலக்கம் 25ஐக் காட்டும் பொருட்டு குடியேற்ற உத்தியோகத்தர் மூலம் வரையப்பட்ட UVA/ MO/ KTG/ LND/ 146A/ LTL/ COM/ 590 இலக்கமுடைய அண்ணளவான வரைபடத்தில் காணித்துண்டு A இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 01 ஏக்கர், 00றூட், 02.7 பேர்ச் அளவுடைய அரசகாணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு (விடுமுறைக்கால ஓய்வு விடுதி ஒன்றினை நடாத்திச் செல்வதற்கு) திரு. டோன். ரவீந்திர தர்மபிரிய அதுகோரல என்னும் நபர் அனுசரணை அடிப்படையில் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது .

02. கோரியிருக்கும் காணியின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : டப்.டி. பிரேமதாச, ஹேமபால, அநுர ஆகியோரின் காணி;

கிழக்கு : ஹேமபால, அநுர, டப்.ஆர்.பி. விஜேபால ஆகியோரின் காணி;

தெற்கு : டப்.ஆர்.பி. விஜேபாலவின் காணி மற்றும் ஏரிக்குரிய ஒதுக்கம்;

மேற்கு : ஏரிக்குரிய ஒதுக்கம் மற்றும் உள்நுழையும் பாதை.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன் பொருட்டு அரசின் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது வருடங்கள் (30) (கௌரவ அமைச்சர் குத்தகையை அனுமதித்த 2022.10.07 ஆந் திகதியிலிருந்து) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- 2022 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதி 2% ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

*தவணைக் கட்டணம்:* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்.;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.10.07 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக்குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்கு கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

04. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காணலப்பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

D.D. நவோத்யா சீ. கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, பெப்புருவரி 17.

03- 57

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/52562.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : පළාත්/ඉකො/ඉර(ඉ9/මකු/දි.බ. 02-03.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டத்தின், மஹகும்புக்கடவல பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 612 ஈ, தளுவேகம கிராம அலுவலர் பிரிவின் தளுவேகம கிராமத்தின் குடியேற்ற அலுவலரினால் வரையப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அளவிளான 10 ஏக்கர் அரசாங்க நிலத்தில் விவசாய வணிக நடவடிக்கைகளுக்காக திரு. தொன் ஆனந்த லக்ஷ்மன் திலகசிறி பாலசூரிய அவர்களினால் குத்தகை அடிப்படையில் பெற்றுத்தருமாறு விண்ணப்பத்துள்ளமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. விண்ணப்பித்துள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : ஏ.எச்.எம்.அபேசிங்ஹ , ஆர்.எச்.எம். தயாரத்ன, ஜீ.கே. நவரத்ன மற்றும் எஸ். எம். தோமஸ் சிங்ஞோவின் காணி;

கிழக்கு :கே.எஸ். திலகரத்ன மற்றும் ஏ.எஸ்.ரன்கஜீவவின் காணி;

தெற்கு : கே. எஸ். தோமஸ் சிங்ஞோ மற்றும் விவசாய காணி;

மேற்கு : பிரதேச சபை வீதி.

03. விண்ணப்பித்துள்ள தேவையான காரணத்திற்கு குத்தகை வழங்க முடியும். அதனால் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட ஏனைய நிபந்தனைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு காணியினை குத்தகைக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது வருடங்கள் (30) (2022.06.30ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்கள்) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- 2022 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுத் தொகை ஐந்து மில்லியன் ரூபாய்க்கு (ரூ.5,000,000.00) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின்படி அவ் ஆண்டின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2022 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டு பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாய் (ரூ.5,000,000.00) க்கு அதிகமாகும் சந்தர்ப்பங்களில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் படி அவ் ஆண்டின் காணியின் பெறுமதியின் 4% ஆகும். இக் குத்தகை தொகை அனைத்து 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தப்படவேண்டியதுடன் அது 05 வருடங்களின் இறுதியில் வருடாந்த குத்தகை தொகையில் 20% சேர்க்கப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம்: தவணைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) இக்காணியில் விவசாய வணிக நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டியதுடன் வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக்கூடாது;

(இ) இக் குத்தகை ஆரம்பித்த ஒரு வருடத்தினுள் காணி ஆணையாளர்/பிரதி காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விடுக்கப்பட்டுள்ள விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட வேண்டும்;

(உ) அமைக்கப்பட்ட/அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறப்பான அபிவிருத்தி நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்ட காலத்தில் குத்தகைக்காரரினால் காணியினை பெற்றுக் கொண்ட காரணத்தினை குறித்த கால எல்லையினுள் அடைய முடியாவிடின், குத்தகையினை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) குத்தகை செயற்படுத்தப்படும் நாள் முதல் 05 ஆண்டுகள் முடியும் வரை இடைகுத்தகைகள் மற்றும் பரிமாற்றங்கள் செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை இடைவிடாது செலுத்த வேண்டியதுடன் குத்தகை பணத்தினை செலுத்தத் தவறிய சந்தர்ப்பங்களில் உடனடியாக ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படும். குத்தகை பணம் இடைவிடாது செலுத்தப்படாவிடின் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைக்கு 10% தண்டப்பணமாக அறவிடப்படும்.

04. இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து 06 வாரங்களுக்குள் குறித்த காணியினை குத்தகைக்கு வழங்க கூடாது என ஒப்புக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலம் முன்வைக்காவிடின் விண்ணப்பத்திற்கமைய குத்தகை வழங்கப்படும்.

டப்.ஆர்.ஏ.ரி.ஷகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.02.15.

03- 66

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/69068.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : NP/ 28/04/02/ SLO/41/1822.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் J/428, மருதங்கேணி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தாழையடி எனும் கிராமத்தில் அமைந்துள்ள பிபி யா 2333 வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் '1' இற்கான வெளிக்கள போதனாசிரியரால் (காணி) தயாரிக்கப்பட்ட சுவடு வரைபடத்தில் H என காட்டப்பட்டுள்ள 01 ஏக்கர் , 01 றூட், விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக (படகு தாயரிப்பு நிலையம் அமைக்கும் நோக்கத்திற்காக) குத்தகைக்குத் தருமாறு கேட்டு வடமராட்சி கிழக்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்க இணையம் விண்ணப்பித்திருப்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : வடமாராட்சி கிழக்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்க இணையத்தின் ஐஸ் தொழிற்சாலை மற்றும் கருவாடு உற்பத்தி நிலையம் (C மற்றும் D);
கிழக்கு : மீன்பிடி மற்றும் நீரியல் திணைக்கள காணி;
தெற்கு : அரச காணி;
மேற்கு : பாதை.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது (30) வருடங்கள் (2023.01.27ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2023 ஆம் ஆண்டுக்கான காணியின் பிரதான விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்குக் (ரூபா 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% குத்தகை. 2023 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா 5 மில்லியனுக்கு (ரூ.5,000,000.00)அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுக்கப்படல் வேண்டும். இந்தக் குத்தகைப் பணம் 5 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த 5 வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% கூட்டி வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்படல் வேண்டும்.

தவணைப் பணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக (படகு தயாரிக்கும் நிலையம் அமைக்கும் ) நோக்கத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்;

(இ) 2023.01.27 ஆந் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளர்/மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்பதியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.01.27 ஆந் தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க்குத்தகை மற்றும் கைம்மாற்றம் மட்டும் அனுமதிக்கப்படும்.;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்;

(ஐ) உரிய நேரத்தில் குத்தகைப் பணத்தினை செலுத்தத் தவறின் உரிய கடன் கட்டணத்தின் 10% வட்டி செலுத்தப்பட வேண்டும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. ஆர். ஏ.ரி. சகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.02.20.

03- 58

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/68954.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : NP/ 28/04/02/ SLO/41/1849.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் J/428, மருதங்கேணி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தாழையடி எனும் கிராமத்தில் அமைந்துள்ள பிபி யா 2333 வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் '1' இற்கான வெளிக்கள போதனாசிரியரால் (காணி) தயாரிக்கப்பட்ட சுவடு வரைபடத்தில் A என காட்டப்பட்டுள்ள 1/2 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக (எரிபொருள் நிலையம் அமைக்கும் நோக்கத்திற்காக) குத்தகைக்குத் தருமாறு கேட்டு வடமராட்சி கிழக்கு மீன்பிடி கூட்டுறவுச் சங்கத்தினர் விண்ணப்பித்திருப்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : பாதை;
கிழக்கு : மருதங்கேணி தாழையடி பாதை;
தெற்கு : கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்தின் காணி;
மேற்கு : வடமராட்சி கிழக்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்க இணையம் அமைந்துள்ள காணி (B).

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2023.01.27ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2023 ஆம் ஆண்டுக்கான காணியின் பிரதான விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்குக் (ரூ.5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% குத்தகை. 2023 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா 5 மில்லியனுக்கு (ரூ.5,000,000.00)அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுக்கப்படல் வேண்டும். இந்தக் குத்தகைப் பணம் 5 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த 5 வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% கூட்டி வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்படல் வேண்டும்.

தவணைப் பணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக (எரிபொருள் நிலையம் அமைக்கும்) நோக்கத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்;

(இ) 2023.01.27 ஆந் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளர்/மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்பதியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.01.27 ஆந் தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க்குத்தகை மற்றும் கைம்மாற்றம் மட்டும் அனுமதிக்கப்படும்.;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்;

(ஐ) உரிய நேரத்தில் குத்தகைப் பணத்தினை செலுத்தத் தவறின் உரிய கடன் கட்டணத்தின் 10% வட்டி செலுத்தப்பட வேண்டும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. ஆர். ஏ.ரி. சகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.02.20.

03- 59

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/67573.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : NP/ 28/04/02/ SLO/41/1764.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டம், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் J/114, திருநெல்வேலி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த திருநெல்வேலி மேற்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள 910001 ஆம் இலக்க கடஸ்திரல் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு இலக்கம் '1' எனவும் 0.6534 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு யாழ்ப்பாண அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினர் (வ-து) (யாழ்கோ) விண்ணப்பித்திருப்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : பாதை (வீதி அபிவிருத்தி திணைக்களம்);
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 02, 26, 27, 46, 47, 67, 68, 86 மற்றும் 91 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 91, காணித்துண்டு இலக்கம் 79 பாதை (பிரதேச சபை ) மற்றும் காணித்துண்டு இலக்கம் 87;
மேற்கு : சேந்தான் தாழ்வு பாலசுப்ரமணியம் மற்றும் திருநெல்வேலி பாற்சபை(பிபி யா 1090 இல் காணித்துண்டு இல.18).

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது (30) வருடங்கள் (2023.01.27ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2023 ஆம் ஆண்டுக்கான காணியின் பிரதான விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்குக் (ரூ.5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% குத்தகை. 2023 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா 5 மில்லியனுக்கு (ரூ.5,000,000.00)அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுக்கப்படல் வேண்டும். இந்தக் குத்தகைப் பணம் 5 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த 5 வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% கூட்டி வருடாந்தக் குத்தகையாகச் செலுத்தப்படல் வேண்டும்.

தவணைப் பணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி வணிக நோக்கம் தவிர்ந்த வேறு எந்த நோக்கத்திற்காக பயன்படுத்தக்கூடாது;

(இ) 2023.01.27 ஆந் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளர்/மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளரின் மனம் திருப்பதியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.01.27 ஆந் தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க்குத்தகை மற்றும் கைம்மாற்றம் மட்டும் அனுமதிக்கப்படும்.;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்;

(ஐ) உரிய நேரத்தில் குத்தகைப் பணத்தினை செலுத்தத் தவறின் உரிய கடன் கட்டணத்தின் 10% வட்டி செலுத்தப்பட வேண்டும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

டபிள்யு. ஆர். ஏ.ரீ. சகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.02.20.

03- 60

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/65879.
மாகாணக் காணி ஆணையாளரின் இல.: CPC/ LC/ LD/04/1/21/97.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

மாத்தளை மாவட்டம், மாத்தளை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 352 சீ, மாளிகாதென்ன கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நாகொல்ல 9 ஆம் பிரிவு மாத்தளை நகர சபைக்கு உட்பட்ட F.V.P. இல. 1703 இன் காணித்துண்டு இலக்கம் 4 இன் 0.3136 ஹெக்டயார் அளவுடைய அரச காணியை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு சிங்கள பௌத்த வித்தியாலயம் நீண்ட கால குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 02;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 02;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 02 மற்றும் மாநகர சபை வீதி;
மேற்கு : மாநகர சபை வீதி.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன் பொருட்டு அரசினால் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு அனுமதிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.-** முப்பது வருடங்கள் (30) (2022.10.05ஆந் திகதியிலிருந்து) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்.-** 2022 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) குறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும்(ரூ.5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர், பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் / நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும் ;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) இந்தக் காணியினைப் பெற்றுக் கொண்ட 2022.10.05ஆந் திகதியிலிருந்து குறித்த நோக்கத்தனை நிறைவேற்றிக் கொள்வதன் பொருட்டு துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாக செலுத்துதல் வேண்டும் . குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்;

(ஐ) குத்தகையினைத் தொடர்ச்சியாகச் செலுத்தாத சந்தர்ப்பங்களில் மீதமாக இருக்கின்ற நிலுவைக் கட்டணத்தின் பொருட்டு 10% தண்டப்பணமும் அறவிடப்படும்.

04. இவ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எழுத்து மூலமாக எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

கே.ஜீ. பீ. சௌமியா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, பெப்புருவரி 14.

03- 62

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/65822.
மாகாணக் காணி ஆணையாளரின் இல.: CPC/ LC/ LD/4/1/28/203.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மாத்தளை மாவட்டம், கலேவலை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 430 ஏ, மாதிபொல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மஹகெதர கிராமத்தில் F.V.P. 79 இன் காணித்துண்டு இலக்கம் 394 இன் மூலம் காட்டப்பட்டுள்ள 0.316 ஹெக்டயார் அளவுடைய அரச காணியை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு வரையறுக்கப்பட்ட பல்லேபொல பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 12 இன் பாதையின் பொருட்டு ஒதுக்கப்பட்ட பகுதி;

கிழக்கு : 13,14 ஆம் இலக்க காணித்துண்டுகள் மற்றும் தற்போதைய 04 மீற்றர் அளவுடைய பாதை;

தெற்கு : பாதை (மீற்றர் 04 பாதை- 2004.06.18 வர்த்தமானி அறிவித்தல்) ;

மேற்கு : கலேவலை மாத்தளை பிரதான வீதி .

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன் பொருட்டு அரசினால் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு அனுமதிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.-** முப்பது வருடங்கள் (30) (2022.09.20ஆந் திகதியிலிருந்து ) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்.-** 2022 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) குறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின்சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

*தவணைக் கட்டணம்:* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது;

(இ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தகைளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் / நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும் ;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) இந்தக் காணியினைப் பெற்றுக் கொண்ட 2022.09.20ஆந் திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதியினுள் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாக செலுத்துதல் வேண்டும் . குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்;

(ஐ) குத்தகையினைத் தொடர்ச்சியாகச் செலுத்தாத சந்தர்ப்பங்களில் மீதமாக இருக்கின்ற நிலுவைக் கட்டணத்தின் பொருட்டு 10% தண்டப்பணமும் அறவிடப்படும்.

04. இவ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எழுத்து மூலமாக எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

கே.ஜீ. பீ. சௌமியா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, பெப்புருவரி 13.

03- 64

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/68578.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : LCD/ 16/ LND/ 28/02/F1/64.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாந்தோட்டை மாவட்டம், லுணுகம்வெஹெர பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 56, லுணுகம்வெஹெர புதிய நகர கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த லுணுகம்வெஹெர புதிய நகர கிராமத்தின் நில வரைபட இல. LCD/16/LND/28/02 /F1/64 இன் காணித்துண்டு இலக்கம் A இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறான 0.1012 ஹெக்டயார் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திரு. ரசிக நிரோஷன் வீரசிங்க என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : எப்.வீ.பீ. 03 இன் காணித்துண்டு இலக்கம் 9923;
கிழக்கு : எப்.வீ.பீ. 03 இன் காணித்துண்டு இலக்கம் 9923;
தெற்கு : உள்நுழையும் பாதை;
மேற்கு : எப்.வீ.பீ. 03 இன் காணித்துண்டு இலக்கம் 9923.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன் பொருட்டு அரசினால் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு அனுமதிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.-** முப்பது வருடங்கள் (30) (2022.11.16ஆந் திகதியிலிருந்து 30 வருடங்கள்) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்.-** 2022 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) குறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். வரி அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும் ;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.11.16 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் குத்தகை வழங்கிய நோக்கத்தினை நிறைவு செய்யும் நோக்கத்துக்காக துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாக செலுத்துதல் வேண்டும் . குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

04. இவ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எழுத்து மூலமாக எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ.ஏ.டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, பெப்புருவரி 14.

03- 63

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/68577.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : LCD/ 16/ LND/ 28/02/F1/64.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாந்தோட்டை மாவட்டம், லுணுகம்வெஹெர பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 56, லுணுகம்வெஹெர புதிய நகரகிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த லுணுகம்வெஹெர புதிய நகர கிராமத்தின் நில வரைபட இல. LCD/ 16/ LND/ 28/ 02 / F1/ 64 இன் காணித்துண்டு இலக்கம் A இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறான 0.1012 ஹெக்டயார் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திரு. ஏக்கநாயக்க சுஜித் புஸ்பகுமார என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : அரச காணி மற்றும் எப்.வீ.பீ. 03 இன் காணித்துண்டு இலக்கம் 4843;
கிழக்கு : உள்நுழையும் பாதை;
தெற்கு : உள்நுழையும் பாதை;
மேற்கு : உள்நுழையும் பாதை.

03. கோரியிருக்கும் காணியினை குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். இதன் பொருட்டு அரசினால் அனுமதிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினைக் குத்தகைக்கு அனுமதிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது வருடங்கள் (30) (2022.11.16ஆந் திகதியிலிருந்து 30 வருடங்கள்) ;

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- 2022 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) குறைவானதாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ.5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தப்பட வேண்டும் என்பதுடன் திருத்தப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்து ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைக் கட்டணம்: அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தகைளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும் ;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.11.16 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தினை தொடர்ச்சியாக செலுத்துதல் வேண்டும் . குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

04. இவ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதிக்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எழுத்து மூலமாக எனக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ.ஏ.டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023.02.14.

03- 65

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/72478.
பிரதேசசெயலாளரின் (பொத்துவில்) இல.: PVL/ DS/ LND/ LTL/01/2021.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாறை மாவட்டம், பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பொத்துவில் 25 கிராம அலுவலர் பிரிவில் ஊறனி கிராமத்தில் பிரதேச நில அளவையாளரால் வரையப் பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 04 ஏக்கர், 01 றூட், 34.5 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு தொன் ஆனந்த பனாப்பிட்டிய என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியதரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வடக்கு : சாந்தமலரின் காணி மற்றும் வீதி, கோவில் பிரதேசம்;
கிழக்கு : கடற்கரை ஒதுக்கீடு;
தெற்கு : சிறு காடு மற்றும் செல்வராஜாவின் காணி;
மேற்கு : வீ. சுதந்திரராஜாவின் காணி மற்றும் சாந்தமலரின் காணி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**-முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் அனுமதித்த 2023.01.27ஆந் திகதி தொடக்கம்);

**வருடாந்தக் குத்தகை.**- 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்குக் (ரூ.5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். 2023 ஆம் வருடத்தில் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ.5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுக்கப்படல் வேண்டும். இந்தக் குத்தகைப் பணம் 5 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும், ஆயினும் திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த 5 வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் கொடுபட்ட வருடாந்தக் குத்தகைப் பணத்தின் 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறு எந்த நோக்கத்திற்காக பயன்படுத்தக்கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்பதியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.01.27 ஆந் தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் மற்றும் கீழ்க்குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்;

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

எஸ்.வி.ஏ.டி.இஷாரா எம் சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, பெப்புருவரி 15.

03- 61

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2023**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மாச்சு** | .. | வெள்ளி | 03.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.02.2023 |
| | | வெள்ளி | 10.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.02.2022 |
| | | வெள்ளி | 17.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.03.2023 |
| | | வெள்ளி | 24.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.03.2023 |
| | | வெள்ளி | 31.03.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.03.2023 |
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 06.04.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.03.2023 |
| | | புதன் | 12.04.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.03.2023 |
| | | வெள்ளி | 21.04.2023 | .. | நண்பகல் 12 | வியாழன் | 06.04.2023 |
| | | வெள்ளி | 28.04.2023 | .. | நண்பகல் 12 | புதன் | 12.04.2023 |
| **மே** | .. | வியாழன் | 04.05.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.04.2023 |
| | | வெள்ளி | 12.05.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.04.2023 |
| | | வெள்ளி | 19.05.2023 | .. | நண்பகல் 12 | வியாழன் | 04.05.2023 |
| | | வெள்ளி | 26.05.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.05.2023 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.